குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,
திண்டுக்கல்.
முன்னிலை: திரு.S.பாக்கியராஜ், பி.எஸ்சி, பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1,
திண்டுக்கல்.
CC No. 377/2026

**2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17 ம் நாள் திங்கட்கிழமை**

**CNR.No.TNDG03-003658-2026**

அரசுக்காக
சார்பு ஆய்வாளர்,
மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலையம்
குற்ற எண்.51/2026

//எதிராக//

சக்கரவர்த்தி 42/2026
த/பெ. பவுன்ராஜ்,
மேலபட்டி, அனுமந்தராயன் கோட்டை,
திண்டுக்கல் கிழக்கு தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.

**Case – Summary**

| S.No | Description | Details |
|---|---|---|
| 1. | The Period of remand of the accused | 16.03.2026 |
| 2. | The date of filing of the complaint/final report in the court | 24.06.2026 |
| 3. | The date of committal of the case to the court of sessions | Not applicable. |
| 4. | The date of questioning of the accused under sections 228, 240, 246 and 251 of the code of Criminal procedure, 1973 as the case may be | 13.07.2026<br>(S.240 Crpc) |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | superior Courts; except routine petitions like petitions under section 317 of the code | | | |
| 6. | The date of examination – in chief and cross-examination of a witness | Witnesses | Examined in – Chief | Examined - in Cross |
| | | PW1 | 17.08.2026 | 17.08.2026 |
| | | PW2 | 17.08.2026 | 17.08.2026 |
| | | PW3 | 17.08.2026 | 17.08.2026 |
| 7. | The date of examination of the accused under section 313 of the code | 17.08.2026 | | |
| 8. | Details of abscondence of an accused and his appearance/ production, as the case may be | - | | |
| 9. | Grant of stay by superior courts and the results thereof | - | | |

இவ்வழக்கு 24.06.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் Mr. T. பாலசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று நடத்திய வழக்கில் இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இன்று (17.08.2026) வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 16.03.2026 ஆம் தேதி திண்டுக்கல் ஊரக உட்கோட்டம், திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட அனுமந்தராயன் கோட்டை, மேலபட்டி டாஸ்மாக் அருகே காலை சுமார்

9.00 மணியளவில் மது குற்றம் சம்மந்தமாக ரோந்து செய்து கொண்டிருந்தபோது, இவ்வழக்கின் எதிரி சக்கரவர்த்தி வயது 42/2026, த/பெ.பவுன்ராஜ் என்பவர், எந்த விதமான அரசு அனுமதியின்றி தனது சுயலாபம் கருதி 180–ML அளவு கொண்ட OLD CHEF BRANDY என்ற –26– அரசு மதுபான பாட்டில்களை சில்லறை விற்பனைக்காக வைத்திருந்தது சட்டப்பிரிவு 4(1) (C) TNP (Amendment) Act 2024 –ன் பிரகாரம் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்க பிரிவு சார்பு ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு 230 BNSS ன் கீழ் வழங்கப்பட்டது. எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP ACT–ன் கீழான குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி மறுத்து குற்றவாளி இல்லை என்று கூறினார்.

3. எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ 4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்.**

கடந்த 16.03.2026 ம் தேதி 9.000 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் அ.சா. 3 ராம்சேட் அவர்களிடம் தலைமை காவலர் வினோத்குமார் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் ஆஜராகி கொடுத்த தனியறிக்கையை பெற்றும், நிலைய குற்ற எண் 51/2026 U/s.4(1) (C) TNP Act முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து எதிரி ஆஜர்படுத்திய மதுப்பாட்டில்களை தலைமை காவலர்கள் **வினோத்குமார், காமாட்சி,** ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். சாட்சிகள் **வினோத்குமார், காமாட்சி,** ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை ஜாமீனில் விடுவித்தும், கைப்பற்றிய மதுப்பாட்டில்களை உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி கொட்டி அழித்து அழிப்பு சான்று தயார் செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் தனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமானவற்றை தொகுத்து எதிரியிடம் 351(1)(பி) of BNSS-ன் படி வினவியபோது எதிரி அவைகளை மறுத்து, பொய் சாட்சியம் என்று கூறினார். பின்னர் எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம்

முடித்துக்கொள்ளப்பட்டது. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6. இவ்வழக்கில் பரிசீலனைக்குரிய விசயம் யாதெனில், எதிரி மீதான பிரிவு 4(1)(c)TNP Act ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதுவேயாகும்.

7. அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவு 4(1)(c)TNP Act–ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது.

8. இவ்வழக்கில் அ.சா.1 வினோத்குமார் தலைமை காவலராக தனது சாட்சியத்தில் கடந்த 16.03.2026 ம் தேதி சார்பு ஆய்வாளர் ராம்சேட் அவர்களின் உத்தரவின் பேரில் தானும் தலைமை காவலர்கள் சாமிநாதன், ராஜா ஆகியோர் போதைபொருள் குற்றத்தடுப்பு சம்மந்தமாக திண்டுக்கல் ஊரக உட்கோட்டப்பகுதிகளில் ரோந்து செய்து திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்திற்குட்பட்ட அனுமந்தராயன் கோட்டை, மேலபட்டி டாஸ்மாக் அருகே காலை சுமார் 09.00 மணிக்கு வந்தபோது அங்கு வெள்ளைநிற பிளாஸ்டிக் சாக்கு பையுடன் சந்தேகத்திற்கு இடமாக இருந்த ஆஜர் எதிரி சக்கரவர்த்தி எங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க அவர் பெயர் விலாசம் கூறினார். அவர் வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையை பார்த்தபோது 180 ml

அளவுகொண்ட Old Chef Brandy-26 மதுபாட்டில்கள் இருந்தது. மேற்படி மதுபாட்டில்களை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு அனுமதி இல்லாமல் அரசு மதுபானக்கடையில் கொஞ்சம் கொஞ்சமாக மதுப்பாட்டில்களை வாங்கி தனது சுயலாபத்திற்காக சில்லறை விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறினார். பின்னர் எதிரியையும் மதுப்பாட்டில்களையும் காலை 09.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்து இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க தான் தனியறிக்கை கொடுத்ததாகவும், சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றும், காவல் நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து வழக்கு சொத்தை தலைமை காவலர்கள் சாமிநாதன், ராஜா, முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், தன்னிடம் காட்டப்படும் தனியறிக்கையில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்ததாக சாட்சியமளித்துள்ளார். **மேலும் அவரது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** " இவ்வழக்கின் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் நிறைய மக்கள் குடியிருப்புகள், ஜன நடமாட்டம் மற்றும் போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். " என குறிப்பிடப்பட்டுள்ளது.

9. இவ்வழக்கில் அத்தாட்சியில் கையொப்பம் செய்த சாட்சியான அ.சா.2 தலைமை காவலர் தனது சாட்சியத்தில் கடந்த 16.03.2026 ம் தேதி சார்பு ஆய்வாளர் ராம்சேட் அவர்களின் உத்தரவின் பேரில் தானும் தலைமை காவலர்கள் வினோத்குமார், ராஜா ஆகியோர் போதைபொருள் குற்றத்தடுப்பு சம்மந்தமாக திண்டுக்கல் ஊரக உட்கோட்டப்பகுதிகளில்

ரோந்து செய்து திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்திற்குட்பட்ட அனுமந்தராயன் கோட்டை, மேலபட்டி டாஸ்மாக் அருகே காலை சுமார் 09.00 மணிக்கு வந்தபோது அங்கு வெள்ளைநிற பிளாஸ்டிக் சாக்கு பையுடன் சந்தேகத்திற்கு இடமாக இருந்த ஆஜர் எதிரி சக்கரவர்த்தி தங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க அவர் பெயர் விலாசம் கூறினார். அவர் வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையை பார்த்தபோது 180 ml அளவுகொண்ட Old Chef Brandy-26 மதுபாட்டில்கள் இருந்தது. மேற்படி மதுபாட்டில்களை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு அனுமதி இல்லாமல் அரசு மதுபானக்கடையில் கொஞ்சம் கொஞ்சமாக மதுப்பாட்டில்களை வாங்கி தனது சுயலாபத்திற்காக சில்லறை விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறினார். பின்னர் எதிரியையும் மதுப்பாட்டில்களையும் காலை 09.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்து இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க தலைமை காவலர் வினோத்குமார் தனியறிக்கை கொடுத்ததாகவும், சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றும், காவல் நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து வழக்கு சொத்தை தன் முன்னிலையிலும், தலைமை காவலர் சாமிநாதன், முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், சார்பு ஆய்வாளர் விசாரித்ததாக சாட்சியமளித்துள்ளார். **மேலும் அவரது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** " இவ்வழக்கின் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் நிறைய மக்கள் குடியிருப்புகள், ஜன

நடமாட்டம் மற்றும் போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். " என குறிப்பிடப்பட்டுள்ளது.

10. அ.சா.3 ராம்சேட் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 16.03.2026ம் தேதி தான் நிலைய பொறுப்பில் இருந்த போது தலைமை காவலர் வினோத்குமார் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த தனியறிக்கையை பெற்று நிலைய குற்ற எண் 0051/2026 U/s.4(1)(C) TNP Act முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். காவல் நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து எதிரி ஆஜர்படுத்திய மதுப்பாட்டில்களை தலைமை காவலர்கள் சாமிநாதன், ராஜா, ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன் என்றும், சாட்சிகள் வினோத்குமார், சாமிநாதன், ராஜா, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், எதிரியையும் தக்க ஜாமீனில் விடுவித்ததாகவும், கைப்பற்றிய மதுப்பாட்டில்களை உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி கொட்டி அழித்து அழிப்பு சான்று தயார் செய்தேன் என்றும், பின்னர் இவ்வழக்கில் தனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தததாகவும், சாட்சியமளித்துள்ளார். **மேலும் அவரது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** " இவ்வழக்கின் சம்பவ இடமானது பொதுமக்கள் நடமாட்டம் மற்றும் பொதுமக்கள் குடியிருப்பு அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ள சாட்சிகள் அனைவரும் தனக்கு கீழ் பணிபுரியும் காவலர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், ஒப்புதல்

வாக்குமூலம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மதுபாட்டில்களை சில்லறை விற்பனைக்காக எதிரி வைத்திருப்பதாக தன்னிடம் எதிரி சொன்னதாக முதல் தகவல் அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. சம்பவத்தேதியில் எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் வழக்கின் ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்துக்கள் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

11. இவ்வழக்கில் எதிரி கடந்த 16.03.2026 ம் தேதி 09.00 மணிக்கு திண்டுக்கல் ஊரக உட்கோட்டம், திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட அனுமந்தராயன் கோட்டை, மேலபட்டி டாஸ்மாக் அருகே எதிரி சக்கரவர்த்தி என்பவர் எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் சுயலாபம் தேடும் நோக்கில் 180ML அளவுகொண்ட Old Chef Brandy-26 மது பாட்டில்களை சில்லறை விற்பனைக்காக வைத்திருந்ததாக அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியமளித்துள்ளனர். மேலும், சம்பவயிடம் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியாக இருந்த போதிலும், தனிநபர் சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் தனிநபர் யாரும் சம்பவம் தொடர்பாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. வழக்கில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை. மேலும், வழக்கு சொத்து அழிக்கப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவு நகல் தாக்கல்

செய்யப்படவில்லை. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து பகுப்பாய்வுக்கு அனுப்பாமல் இவ்வழக்கில் புலன்விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதை பார்க்கும்போது, அரசுத் தரப்பு வழக்கில் சந்தேகம் எழுகிறது. எனவே அரசு தரப்பில் எழும் சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12. முடிவாக எதிரி மீது பிரிவு 4(1)(c) TNP Act –ன் கீழான குற்றச்சாட்டு எதுவும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால் எதிரி 4(1)(c) TNP Act –ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை 271 (1) BNSS பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

13. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யாத காரணத்தால், அது குறித்த உத்தரவு எதுவும் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என் ஆகஸ்ட் 17 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்புரை என்னால் பகரப்பட்டது.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.08.17 05:44:59 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அ.சா.1. திரு. வினோத்குமார் ( தலைமை காவலர்)

அ.சா.2 திரு. ராஜா ( தலைமை காவலர்)

அ.சா.3. திரு. ராம்சேட் (சார்பு ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வ எண். | தேதி | சான்றாவணங்கள் |
|---|---|---|
| 1 | 17.08.2026 | தனியறிக்கை |
| 2 | 17.08.2026 | அத்தாட்சி |
| 3 | 17.08.2026 | முதல் தகவல் அறிக்கை |
| 4 | 17.08.2026 | அழிப்பு சான்று |

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.08.17 05:45:11 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.

**<u>குறிப்பு–</u>**

1. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2.எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.